## பிப்ரவரி – 2016 மாதத்திற்கான பூச்சி மற்றும் நோய் தாக்குதல் பற்றிய முன்னறிவிப்பு

பயிர் பாதுகாப்பு மையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தால் நடத்தப்பட்ட பிப்ரவரி மாதத்திற்கான பூச்சி மற்றும் நோய் முன்னறிவிப்பு பற்றிய ஆய்வு அறிக்கை பிப்ரவரி – 2016.

**நெல்**

நெல்பயிரில் இலைச்சுருட்டுப்புழு மற்றும் தண்டு துளைப்பான் தாக்குதல் கன்னியாகுமரி, இராமநாதபுரம், தேனி, புதுக்கோட்டை, திருநெல்வேலி மற்றும் சேலம் மாவட்டங்களில் காணப்படுகின்றது. இவற்றைக் கட்டுபடுத்த விளக்குப் பொறிகளை அமைத்து அந்த பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம் மற்றும் வேப்பங்கொட்டை சாறு 5 சதக் கரைசலைத் தயாரித்து பயிர்களில் தெளிக்கவும். பூச்சிகளின் பாதிப்பு அதிகமாக இருக்கும் நிலையில் இரசாயன பூச்சி கொல்லியான கார்டாப் ஹைட்ரோகுளோரைட் 50 % எஸ்.பி 400 கி / ஏக்கர் அல்லது குளோர்பைரிபாஸ் 20 % இ.சி. 500 மில்லி / ஏக்கருக்கு தெளிக்கவும்.

நெல்லில் இலைப்புள்ளி நோய் தாக்குதல் தேனி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் பரவலாகக் காணப்படுகிறது. இவற்றைக் கட்டுப்படுத்த மேங்கோசெப் 400-500 கிராம் / ஏக்கர் (அ) எடிபென்பாஸ் 200 மி.லி / ஏக்கர் என்ற முறையில் கலந்து 2 அல்லது 3 முறை 10-15 நாட்கள் இடைவெளியில் நோய் தாக்குதலுக்கேற்ப தெளிக்குமாறு விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

பாக்டீரியா இலைக் கருகல் நோய் தாக்குதல் தேனி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் தென்படுகிறது.. இவற்றைக் கட்டுப்படுத்த கோசைடு காப்பர் ஹைட்டிராக்ஸைடு @ 500 கிராம் / ஏக்கர் என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்துமாறு விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கப்படுகிறது.

**பருத்தி**

திருநெல்வேலி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் பருத்தி செடியில் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் நடமாட்டம் தென்படுகிறது. இவற்றின் நடமாட்டத்தை மஞ்சள் நிற ஒட்டுப் பொறியை வைத்துக் கண்காணிக்க வேண்டும். தேவைப்பட்டால் வேப்பங்கொட்டைச் சாறு 5 சதவீதம் கரைசல் (அல்லது) இமிடோகுளோபிரிட் 200 எஸ்.எல் 40 மி.லி. (அ) மிதைல் டெமட்டான் 25 இ.சி. 200 மில்லி ஒரு ஏக்கருக்கு தெளிக்கவும் (400 லிட்டர் தண்ணீர் ஒரு ஏக்கருக்கு).

காய்ப்புழுவின் நடமாட்டம் பருத்தியில் தேனி, சேலம் மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் தென்படுகிறது. இனக்கவர்ச்சிப் பொறிகளை ஏக்கருக்கு 5 வைத்து அந்துப் பூச்சியின் நடமாட்டத்தை கண்டறிந்து, தேவைக்கு ஏற்ப வேப்பங்கொட்டைச் சாறு 5 சதம் அல்லது பாசலோன் 35 இ.சி. 600 மில்லி குளோர்பைரிபாஸ் 20 இ.சி 800 மில்லி ஒரு ஏக்கருக்கு என்ற அளவில் பயிர்களில் தெளிக்க வேண்டும்.

**கரும்பு**

கடலூர், கோயமுத்தூர், ஈரோடு, விருதுநகர் மற்றும் சேலம் மாவட்டங்களில் கரும்பு தண்டுத்துளைப்பான் தாக்குதல் பொருளாதார சேத நிலைக்குக் குறைவாகவே காணப்படுகின்றது. இருந்தாலும் மழை பெய்ய வாய்ப்பு அதிகம் இல்லாத வறண்ட வானிலை காணப்படுவதற்கான அறிகுறிகள் தென்படுவதால் தண்டுதுளைப்பானின் சேதம் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதைக் கட்டுப்படுத்த டிரைக்கோகிரம்மா முட்டை ஒட்டுண்ணிகளை 4வது மாதம் முதல் 15 நாட்கள் இடைவெளியில் ஏக்கருக்கு 1 சி.சி. என்ற அளவில் வெளியிட வேண்டும்.

**நிலக்கடலை**

விருதாசலம், கடலூர், விருதுநகர், தேனி மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் இலைச் சுருட்டுப் புழுவின் தாக்குதல் காணப்படுகிறது. விளக்குப் பொறிகளை வைத்து அந்தப் பூச்சிகளின் நடமாட்டத்தினைக் கண்காணிக்கவும் தேவைப்படின் வேப்பங்கொட்டைச் சாறு 5 சதவீதம் தயாரித்து தெளிக்கவும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் இலைப்புள்ளி நோய் தென்படுகிறன்றது. இவற்றை கட்டுப்படுத்த கார்பன்டெசிம் 200 கிராம் / ஏக்கர் (அ) மேங்கோசெப் 400 கிராம் / ஏக்கர் (அ) குளோரோதலானில் 400 கிராம் / ஏக்கர் கரைசலைத் தெளித்துக் கட்டுப்படுத்துமாறு விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

**பாசிப்பயறு மற்றும் உளுந்து**

பாசிப்பயறு மற்றும் உளுந்து பயிரில் தென்படும் மஞ்சள் தேமல் நோயை பரப்பும் வெள்ளை ஈயை கட்டுப்படுத்த விவசாயிகள் டைமித்தோவேட் 200 மில்லி / ஏக்கர் அல்லது மிதைல் டிமட்டான் 200 மில்லி / ஏக்கர் என்ற அளவில் தெளிக்கலாம்.

**காய்கறிப் பயிர்கள்**

**தக்காளி**

காய்துளைப்பானை கட்டுப்படுத்த தக்காளி பயிர்களுக்கு நடுவே ஊடு பயிராக சாம்மந்தி செடிகளை 1:16 வரிசையில் நடவும். இனக்கவர்ச்சி பொறிகள் (12/ எக்டர்) அமைத்து அந்துப்பூச்சிகளின் நடமாட்டத்தை கண்டறியவும். முட்டை ஒட்டுண்ணி

*ட்ரைக்கோகிராமா* வினை (50,000 / எக்டர்) பூக்கும் பருவத்தில் விடவும். தேவைப்படின் *பேசிலஸ் துரிஞ்சியன்சிஸ்* 2 கிராம் / ஒரு லிட்டர் தண்ணீருக்கு அல்லது வேம்பு பூச்சி மருந்து 1.0% இ. சி (10000 பிபிஎம்) 2 மில்லி / ஒரு லிட்டர் தண்ணீருக்கு அல்லது இன்டாக்சாகார்பு 14.5% எஸ். சி 8 மில்லி 10 லிட்டர் தண்ணீருக்கு அல்லது புளுபென்டமைடு 20 டபில்யு. ஜி 5 கிராம் / 10 லிட்டர் தண்ணீருக்கு கலந்து தெளிக்கவும்.

இலை சுரங்கப் பூச்சி தாக்குதலை கண்காணிக்க மஞ்சள் ஒட்டும் பொறி (12/ எக்டர்) அமைத்து கண்காணிக்கவும். தேவைப்படின் கார்போபியூரன் 3 ஜி 33 கிலோவை ஒரு எக்டருக்கு நடவு செய்யும் போது இடவும் (அல்லது) டைமித்தோபியட் 1 மில்லி / லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். களைச் செடிகளை பிடுங்கி அழிக்கவும்.

**வெண்டை**

மஞ்சள் தேமல் நோய்யை கட்டுப்படுத்த வெள்ளை ஈ யின் நடமாட்டத்தை மஞ்சள் ஒட்டும் பொறி (12/ எக்டர்) அமைத்து கண்காணிக்கவும். தேவைப்படின் மித்தைல் டெமட்டான் அல்லது டைமித்தோயேட் 2 மில்லி அல்லது இமிடாகுளோரோபைரிட் 17.8 எஸ்.எல் 2 மில்லி / 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

**மிளகாய்**

மிளகாயில் காய் புழுக்களை கட்டுப்படுத்த இனக்கவர்ச்சி பொறிகள் (12/ எக்டர்) அமைத்து அந்துப்பூச்சிகளின் நடமாட்டத்தை கண்டறியவும். தாக்கப்பட்ட காய்கள் மற்றும் வளர்ந்த புழுக்களை கைகளினால் எடுத்து அப்புறப்படுத்தவும். தேவைப்படின் *பேசிலஸ் துரிஞ்சியன்சிஸ்* 2 கிராம் ஒரு லிட்டர் தண்ணீருக்கு கலந்து தெளிக்கவும்.

**பப்பாளி மாவுப் பூச்சி**

மரவள்ளி, பப்பாளி மற்றும் மல்பெரி பயிரிடும் விவசாயிகள் பப்பாளி மாவுப் பூச்சியின் தாக்குதலைக் கண்காணிக்கவும். இவற்றை ஒட்டுண்ணிகளின் மூலம் கட்டுப்படுத்தவும்.

**தகவல்**

இயக்குநர், பயிர் பாதுகாப்பு மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை-03.